**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.156/2016**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 11.06.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர சந்திப்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் துரைபாண்டியன் தற்போது இறந்துவிட்டார். நான்தான் மேல்விசாரணை அதிகாரி ஆவேன். 01.12.2015 ம் தேதி தலைமை காவலர் இராஜேந்திரன் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண்.535/2015 சட்டபிரிவு 379 இதச வழக்கினை உதவி ஆய்வாளர் துரைபாண்டியன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றயை தினம் பகல் 12.15 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்பையா பாண்டி, கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அசாஆ.7 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.8. ஆகும்.

பின்னர் சாட்சிகள், சுப்பையாபாண்டி, கார்த்திக், கிறிஸ்டி, இராஜேஸ்வரி, சாம்பிரபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் பின்னர் அந்த வழக்கு கோப்பினை நான் 04.06.2016 ம் தேதி என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரித்தபோது முந்தை ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் அவரிடம் கூறியதுபோல் என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவயிடத்தை பார்வையிட்டபோது ஏற்கனவே தயார் செய்த பார்வை மகஜர், வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை.

தென்காசி காவல் நிலைய குற்ற எண்.243/2016 பிரிவு 294(பி), 387, 506(2) இதச வழக்கு சம்மந்தமாக தென்காசி இபி ஆபிஸ் பக்கம் வைத்து வாகன தணிக்கையின் போது TN76 AD 7273 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகனத்தை ஓட்டி வந்த பாலசுப்பிரமணியன் அவரது பின்னால் அமர்ந்து வந்த மணிகண்டன் ஆகியோரைகளை கைது செய்து சாட்சிகள் மைதீன், சாகுல்ஹமீது ஆகியோர் முன்னிலையில் எதிரிகளை விசாரிக்க எதிரி மணிகண்டன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தான 22 கிராம் அறுந்தநிலையில் காணப்பட்ட செயின் அவர் ஓட்டிவந்த வாகனத்தின் சீட்டுக்கு அடியில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததையும், மற்றும் பல இடங்களில் திருடிய நகைகளை ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கின் சம்பவத்தை குறிப்பிட்டு இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட அறுந்த நிலையில் உள்ள முறுக்கு செயினை அவருடைய இருசக்கர வாகனத்தில் சீட்டுக்கு அடியில் இருந்து தங்களிடம்

அடையாளம் காட்டி எடுத்து கொடுக்கிறேன் என்று கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.9**. அதன் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு இபி ஆபிஸ் முன்பு வைத்து எடுத்துக்கொடுத்த நகைகளை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.10. ஆகும்**.

பின்னர் எதிரிகளையும், சொத்துக்களையும் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சொத்தை படிவம் 91ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.11**. அறுந்த நிலையில் உள்ள 22 கிராம் எடை கொண்ட தங்க முறுக்கு செயின் ஒன்று **அசாபொ.1** ஆகும்.

சாட்சிகள் மைதீன், சாகுல்ஹமீது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் இராஜந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி கிறிஸ்டி என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

14.07.2016ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 379 இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்வையிட்ட பின்புதான் நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாள் 30.11.2015ம்தேதி நேரம் 19.00 மணி என்றால் சரிதான். மறுநாள் 11.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நடந்து வந்தால் 10-15 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் நடந்து வருபவர்களின் வேகத்தை பொறுத்தது. முதல் தகவல்

அறிக்கை படிவம் காலம் 8ல் 16 மணி நேர கால தாமதத்திகான குறிப்பிட்ட காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காலம் 15ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் மற்றும் நாள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டதா என்ற உறுதி செய்து விட்டு விசாரணை தொடங்கினேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம் விசாரணை கோப்பில் துலங்காது. கிறிஸ்டி புகார் மனுவில் தென்காசி வெல்காம்ராஜ் ஜவுளி கடைக்கு போய்விட்டு யூனியன் ஆபிஸிக்கு நடந்து போய்கொண்டிருக்கும்போது சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரரும் அவரது தோழி ராஜேஸ்வரியும் சேர்ந்து நடந்து வந்தபோது தான் சம்பவம் நடந்ததாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த தினத்தில் வாகன தணிக்கை செய்ததாக பொது நாட்குறிப்பிலும் என்னுடைய பாக்கெட் டைரியிலும் துலுங்கும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி பாலசுப்பிரமணியன் என்பவரிடம் நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். குற்ற எண். 243/2016 வழக்கிலும் நான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். எதிரியை கைது செய்த இடத்திதிற்கும் விஏஓ அலுவலத்திற்கும் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு விஏஓவை அழைக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் எதிரி பாலசுப்பிரமணியன் என்பவருக்கு உரிமைபட்டது என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசா.1 கிறிஸ்டி என்பவர் செயின் வாங்கியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. அசா.1 கிறிஸ்டி, அசா.2 சாம்பிரபுவின்

மனைவி என்றால் சரிதான். அசா.4 , அசா.1ன் தோழி என்றால் சரிதான். அசா.4, அசா.3 ஒரே அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அசா.1ம் , அசா.5 கார்த்திக் என்பவரும் ஒரே மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அசா.2 சாம்பிரபு நடத்தி வரும் தாமஸ் என்ற ஹோமியோபதி கிளினிக் இருக்கும் இடத்திற்கும், சம்பவயிடத்திற்கும் 1/4 கி.மீ இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. பட்டியல் சாட்சி சாம்பிரபு மருத்துவர் என்று என்னுடைய விசாரணையில் தெரியவரவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரரிடம் இருந்து எந்த புகாரும் பெறவில்லை என்றாலும், நான் புகார்தாரரிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டு, இந்த வழக்கிற்கு ஏதுவாக பின்னர் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருளுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:29:32 +0530